


*Advanced Level*

# இஸ்லாம்

(முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களுடன்)

# இறுதிக் கருத்தரங்கு




## MOULAVI
## A.H.SAFEER
(SLTS, JP)

BA.(Special .in Political Science), MA in Political Science ®
Dip.in. Human Rights& Peace studies (University of Colombo)
Dip. In. Conflict Resolution & Peace preparedness (CPS)
Resource person on peace & power sharing , TOT (Trainer) (NPC),
Dip.in. law, Dip.in. HRM, Dip.in.ICT,


**CLASS CENTERS**

BRAINS KALMUNAI · IKB NINTAVUR · MLC KALMUNAI · HAPPY KALUWANCHIKUDY · SMART OLUVIL · ATH. THAIBA SAINTHAMARUTHU

**VISITING CENTERS**

MMV IKKIRIKOLLAWA · MMV WELIMADA · AL- AQSHA POLANNARUWA · MMV VISSAWELA · SRFMV BANDARAWELA

## இறுதி வினாத்தாள் கட்டமைப்பு

**வினாத்தாள் – I. (நேரம் 2 மணித்தியாலம்)**

**இது ஐந்து தெரிவுகளைக் கொண்ட 50 பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கு இரண்டு புள்ளிகள் வீதம் மொத்தமாக 100 புள்ளிகள் ஆகும்.**

**வினாத்தாள் – II. (நேரம் 3 மணித்தியாலம்)**

**(மேலதிக வாசிப்புக்கு 10 நிமிடம். 3 மணித்தியாலம் 10 நிமிடங்கள்)**

**இவ்வினாத்தாள் பகுதி - I , பகுதி - II என இரு பகுதிகளைக் கொண்டிருக்கும்**

பகுதி – ***I***

**மூன்று கட்டமைப்பு வினாக்களைக் கொண்டது. அவற்றுல் எவையேனும் இரு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் 40 புள்ளிகள் வழங்கப்படும்.**

பகுதி – ***II***

**இப்பகுதி கட்டுரை வகை வினாக்கள் ஐந்தைக் கொண்டது. அவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாக்கும் 20 புள்ளிகள் வீதம் இப்பகுதிக்குரிய மொத்தப் புள்ளிகள் 60 ஆகும்.**

**வினாத்தாள் II இற்கு மொத்தப் புள்ளிகள் 100**

**இறுதி புள்ளி கணித்தல்**

**வினாத்தாள் – II. = 100**

**வினாத்தாள் – I. = 100**

**இறுதிப்புள்ளி = 200 /2 = 100**

# எதிர்பார்க்கை வினாக்களுடன்

## மாபெரும் நிறைவுக் கருத்தரங்கு

## 2020

# ISLAM

## *Brains - Kalmunai*

## 2020.09.24

**Moulavi :**

# AH. SAFEER

safeer

பயிற்சியும் முயற்சியும் வெற்றிக்கு வழி

# AH. SAFEER (SLTS , JP)

BA.(Hons .in Political Science), Dip.in. Hu.Rights & Peace stu, (University of Colombo)
Dip. In. Conflict Resolution & Peace preparedness, (CPS) Resource person on peace & power sharing


*கல்வி பொதுத் தராதரப் பத்திர ( உயர் தர)ப் பரீட்சை - 2020*

## எதிர்பார்க்கை வினாக்களுடன் நிறைவுக் கருத்தரங்கு

# இஸ்லாம்

Islam Islam Islam

| 44 | |
|---|---|
| T | I |

Name :

## பகுதி – 01

**01.** இஸ்லாத்தின் நம்பிக்கை சார்ந்த அடிப்படைகளை உள்ளடக்கிய பகுதி எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
1. தப்ஸீர்
2. றூஹானிய்யாத்
3. அகாஇத்
4. ம:.பிராத்
5. பிக்ஹ்

**02.** ஆன்மீக துறைக்கு அல்குர்ஆன் ஹதீஸ் கூறும் வழிமுறைகள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
1. அகீதா
2. தஸவ்வுப்
3. இபாதத்
4. முனாஹகாத்
5. ஜினாயத்

**03.** மதீனாவில் பிரதேச நிர்வாகத்திற்காக நபியவர்களால் நியமிக்கப்பட்டவர்கள் எவ்வாறு அழைக்கப்படகின்றனர்?
1. காயித்கள்
2. நாயிப்கள்
3. முதீர்கள
4. அமீர்கள்
5. அமீர்கள

**04.** பின்வரும் செயல்களில் நோன்பை முறிக்காத செயல்
1. பிள்ளைப்பேறு
2. உடலுறவு கொள்ளுதல்
3. ஊசி மருந்து ஏற்றல்
4. மன முரண்டாக வாந்தி எடுத்தல்
5. ஸுப்ஹுக்கு அதான் சொன்ன பின் உணவு உட்கொள்ளல்

**05.** "மனிதர்கள் அனைவரும் அல்லாஹ்வின் குடும்பம். அல்லாஹ்வின் குடும்பத்திற்கு மிகவும் பயனுள்ளவர்களே அல்லாஹுவுக்கு மிகவும் விருப்பத்திற்கு உரியவர்." என்பது
1. குர்ஆனின் கூற்று
2. ஹதீஸ்
3. ஒரு ஸஹாபியின் கூற்று
4. ஓர் இமாமின் கூற்று
5. ஓர் அறிஞரின் கூற்று

safeer

**06.** ஸகாத் விதியாகும் பொருட்கள் அடங்கியுள்ள தொகுதி

1. தங்கம், வெள்ளி, தோட்டம்
2. வாகனம் , தளபாடம் , நெல்
3. கோதுமை, பேரீச்சம் பழம் , வீடு
4. ஆடு, தங்கம் , பேரீச்சம் பழம்
5. புதையல் , வெள்ளி, வாகனம்

**07.** ஹுகூகுல் இபாதத்தை சேர்ந்த விடயம்

1. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுதல்
2. இறைவனை வணங்குதல்
3. முஹம்மத் அவர்களை நபியாக ஏற்றல்
4. இறைவனிடம் மன்னிப்பு கோரல்
5. ரமழான் நோன்பில் குர்ஆனை ஓதி முடித்தல்

**08.** தலாகுல் பிதஃ இல் அடங்காத செயல்

1. மூன்று தலாக்கையும் ஓரே தடவையில் கூறல்
2. உடலுறவு கொண்ட நிலையில் தலாக் கூறல்
3. அசுத்தமான நிலையில் தலாக் கூறல்
4. நிபாஸிலிருந்து தூய்மையாகாத நிலையில் தலாக் கூறல்
5. தூய்மையான காலத்தில் உடலுறவு கொள்ளாத நிலையில் தலாக் கூறல்

**09.** ஹஜ்ஜுக்கு வேறாகவும் உம்ராவுக்கும் வேறாக நிய்யத் வைக்கும் முறை

1. அத்தமத்துஉ
2. அல் கிரான்
3. அல் இப்ராத்
4. அல் இத்லாக்
5. இஹ்ஸான்

**10.** "அல்லாஹ்வுக்கு எதனையும் இணைவைக்க மாட்டோம், திருடமாட்டோம், விபச்சாரம் செய்யமாட்டோம், பிள்ளைகளை கொலை செய்யமாட்டோம், அவதூறு சொல்ல மாட்டோம" என மதீனாவாசிகள் உறதியளித்த உடன்படிக்கை எது?

1. இரண்டாம் அகபா உடன்படிக்கை
2. குதைபியா உடன்படிக்கை
3. முதலாம் அகபா உடன்படிக்கை
4. மதீனா சாசனம்
5. பையத்

**11.** ஹதீஸ் கிரந்தங்களில் **முத்தபக்குன் அலைஹி** என்பதனூடாக உணர்த்தப்படுவது

1. இமாம் அபூகனிபா, இமாம் மாலிக் அவர்களால் வழஙகப்பட்ட தீர்ப்புக்கள்
2. இமாம்களான புஹாரி, முஸ்லிம் ஆகிய இருவரும் ஒன்றினைத்து அறிவித்த ஹதீஸ்கள்
3. இமாம்களான புஹாரி, முஸ்லிம் ஆகியோரால் நிராகரிக்கப்பட்ட ஹதீஸ்கள்
4. ஹதீஸ் குத்ஸி, ஹதீஸ் நபவி ஆகியவற்றை சுட்டிக்காட்டுபவை
5. இமாம் ஷாபிஈ அவர்கள் எகிப்திலும் பக்தாத்திலும் வழங்கிய தீர்ப்புக்கள்

**12.** ஓர் இஸ்னாத்தில் தொடர்ச்சியாக இரண்டு அறிவிப்பாளர்கள் ஓர் இடத்திலோ அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களிலோ விடுபட்டு இருத்தல்

1. முர்ஸல்
2. முஅல்லக்
3. முன்கதீ:.
4. மு:.தல்
5. மக்தூ:.

Safeer

**13.** நபியவர்கள் வஹியினை பெற்றுக் கொண்ட முறைகளில் மிகக் கடினமான முறை
1. கனவின் மூலம்
2. அசரீரி மூலம்
3. மனித உருவில் மலக்கு வருவதன் முலம்
4. மணியோசை மூலம்
5. ஜிப்ரில் அலை அவர்கள் பூரண உடலுடன் வருவதன் மூலம்

**14.** அஸ்ஸுஹூருல் ஹூறும் பிரிவில் அடங்கும் மாதங்கள்
1. முஹர்ரம், துல் ஹஜ், ரஜப், ரமழான்
2. ருமழான், ஷவ்வால், துல் ஹஜ், துல் கஃதா
3. ரஜப், முஹர்ரம், துல் ஹஜ், துல் கவ்தா
4. துல் கவ்தா ஹஜ் ரஜப், ரமழான்
5. ரஜப், முஹர்ரம், துல் ஹஜ், ஷவ்வால்

**15.** வியாபாரத்தில் ஓர் வியாபாரி தன் வசமுள்ள குறித்த பொருளை விற்றுவிட்டதாக கூறும் கூற்று
1. பய்உ
2. ஸலம்
3. கபூல்
4. ஈஜாப்
5. அத்தஸ்ஈர்

**16.** உண்பதற்கு அனுமதிக்கப்பட்டவற்றுள் ஒன்று
1. முறையாக அறுக்கப்படாத மிருகம்
2. நகத்தால் பிராணிகளை வேட்டையாடக்கூடிய பறவை
3. கொல்லும் படி ஏவப்பட்ட பிராணி
4. உடும்பு
5. ஜல்லாலா

**17.** பிற்போடப்பட்ட கொடுப்பனவு வியாபாரம் அல்லது தவனை அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல் வியாபாரம்
1. பைஉல் முஅஜ்ஜல்
2. அர் ரஹ்ன்
3. அஸ்ஸம்ஸரா
4. அல் கர்ள்
5. இஜாரா

**18.** முரண்பாடான அகீதாப்பிரிவுகள் தோன்றியதற்கான காரணிகள்
A. அந்நிய கலாச்சாரத் தாக்கம்
B. இஸ்லாத்தின் இலகு தன்மை
C. அல்லாஹ் பற்றி அதிகம் ஆராய்ந்தமை
D. அரசியல் பின்னணி
E. அல்குர்ஆன், அஸ்ஸுன்னா வழிகாட்டல்களை பிழையாக புரிந்து கொண்டமை

1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE

**19.** வாரிசுரிமைச் சொத்தில் பங்கு பெறும் பிரிவுகளின் ஒழுங்கு முறையை காட்டும் தொகுதி
1. அல் அர்ஹாம், அஸபாக்கள், அஸ்ஹாபுல் புரூழ்
2. அஸபாக்கள், அஸ்ஹாபுல் புரூழ், அல் அர்ஹாம்
3. அல் அர்ஹாம், அஸ்ஹாபுல் புரூழ் ,அஸபாக்கள்
4. அஸ்ஹாபுல் புரூழ், அஸபாக்கள், அல் அர்ஹாம்
5. அஸ்ஹாபுல் புரூழ், அல் அர்ஹாம், அஸபாக்கள்

**20.** தனது மனைவியை மீளப்பெற முடியாத தலாக்
1. தலாக் ரஜஈ
2. தலாக் பிதஈ
3. பைனூனா ஸுக்ரா
4. பைனூனா குப்ரா
5. குல்உ

safeer
பயிற்சியும் முயற்சியும் வெற்றிக்கு வழி

**21.** இஸ்லாமிய வாரிசுரிமைச்சட்டத்தில் சிலர் இருப்பதனால் வேறு சிலருக்கு கிடைக்க இருந்த பங்கின் அளவு குறைவதனை அறபியில் எவ்வாறு அழைப்பர்?
1. அல் ஹஜ்ப்
2. ஹஜ்புல் ஹிர்மான்
3. ஹஜ்புந் நுக்ஸான்
4. ஹாஜிப்
5. மஹ்ஜூப்

**22.** இலங்கைக்கு கி.பி 1344இல் வருகை தந்த முஸ்லிம் தேச சஞ்சாரியான இப்னு பதூதா எந்த நாட்டை சேர்ந்தவர்
1. ஏகிப்து
2. மொரோக்கோ
3. பலஸ்தீன்
4. இந்தியா
5. சீனா

**23.** தாடி வளர்ப்பதில் ஸுன்னத் வாஜிப் என்று கருத்து வேறுபாடு கொண்டாலும் தாடி வைக்க வேண்டும் என்பதில் அறிஞர்கள் உடன்படும் இஜ்மா
1. இஜ்மா அக்ஸரிய்யா
2. இஜ்மா முரக்கப்
3. இஜ்மா நக்லி
4. இஜ்மா இஜ்திஹாதி
5. இஜ்மா ஸரீக்

**24.** அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு ஆஸ் (ரழி) வைத்திருந்த ஸஹீபாவின் பெயர்
1. ஸஹீபா அஸ்ஸாதீகா
2. ஸஹாத் பற்றிய ஸஹீபா
3. முஅத்தா
4. ரிஸாலா
5. அஹாதீஸுல் கரீம்

**25.** நுபுவத் தொடர்பான விளக்கங்கள் பொதிந்துள்ள விடைத்தொகுதி
A. அனைத்து ரஸூல்மார்களும் பெற்றிருப்பர்.
B. இது கிடைக்கப் பெறாத சமூகம் தண்டிக்கப்படுவதில்லை
C. முஹம்மத் நபி காத்தமுல் அந்பியா ஆவார்
D. ரஸூல்மார்களும் நபிமார்களும் ஒரே அந்தஸ்தில் உள்ளவர்களாவர்
E. நபிமார்களின் எண்ணிக்கை தொடர்பில் நிலையான எண்ணிக்கை இல்லை.

1. ABDE 2. DEBA 3. BCDE 4. ACDE 5. EABC

**26.** இஜ்திஹாத் மூலம் தீர்வு பெறப்பட்ட விடைத் தொகுதி
A. விபச்சாரத்திற்கு 100 கசையடி
B. வட்டி எடுப்பது ஹராமானது
C. இரத்த தானம்
D. உறுப்புத் தானம்
E. பரிசோதனைக் குழாய் குழந்தை
F. கடன் அட்டை பாவித்தல்
G. பங்குச்சந்தை

1. CDEFG 2. BCDEF 3. ABCDE 4. DEFGB 5. AEFGB

**27.** அயல் வீட்டான் அழுக்குகளை கொட்டுவதன் மூலம் பக்கத்து வீட்டான் சங்கடத்தை எதிர் கொள்கின்றான். பக்கத்து வீட்டான் இவ் விடயத்தை கண்ணியமாக அணுகிய போதிலும் முரண்பாடு வளர்ந்தன. இப்போது ஒரு முஸ்லிமின் பணி.
1. அவனது வீட்டுக்கு துர்நாற்றம் வீசுமாறு அழுக்குகளை கொட்டல்
2. அந்நியக்காரன் என்று கூறி அவனை ஒதுக்கி உறவுகளை துண்டித்தல்
3. பொலிஸில் முறையிட்டு சட்ட நடவடிக்கை எடுத்தல்
4. அவனது அநியாயங்களை சகித்து கொண்டு உபகாரம் செய்தல்
5. அவனது வீட்டுக்கும் இவரது வீட்டுக்கும் இடையில் மதிலமைத்தல்

Safeer
ஸஃபீர் முஹம்மத் வெற்றிக்கு வழி

**28.** இஸ்லாமிய நிதி நிறுவனமான திரைசேரிக்கு பைத்துல் மால் என பெயரிட்ட கலீபா
1. உஸ்மான் ரழி
2. உமர் ரழி
3. அபூபக்கர் ரழி
4. நபியவர்கள்
5. அலி ரழி

**29.** ''ஆணாயினும் பெண்ணாயினும் உங்களில் எவருக்கும் வாழ்க்கை துணைஇல்லாவிட்டால் அவர்களுக்கு திருமணம் செய்து விடுங்கள்'' என்பது
1. குர்ஆனின் கூற்று
2. ஹதீஸ்
3. ஒரு ஸஹாபியின் கூற்று
4. ஓர் இமாமின் கூற்று
5. ஓர் அறிஞரின் கூற்று

**30.** ஆன்மீக துறையின் தந்தை என அழைக்கப்பட்டவர்
1. இமாம் கஸ்ஸாலி
2. அப்துர் காதிர் ஜீலானி
3. ஸுஹ்ரவர்த்தி
4. இப்ராஹிம் பின் அத்ஹம்
5. இப்னு அரபி

**31.** அல்குர்ஆன் பால் ஒரு முஸ்லிமுக்குள்ள கடமைகள்

A. அல்குர்ஆனை ஓதுதல்
B. அல்குர்ஆனை விளங்குதல்
C. அல்குர்ஆன் வழி நடத்தல்
D. அதனை வீட்டு சுவர்களில் தொங்க விடல்
E. அதன் பால் அழைத்தல்

1. BCDE  2. ABCD  3. EDAB  4. ABCE  5. AECD

**32.** ''அல் முஷாரகா'' எனப்படும் கூட்டு வர்தகத்திற்கு தேவையான நிபந்தனைகளில் ஒன்று
1. இலாப விகிதம் பற்றி முடிவு செய்திருத்தல்
2. இலாப நட்டத்தை பகிர்ந்து கொள்ளும் முறையை ஆரம்பத்திலேயே முடிவு செய்திருத்தல்
3. மூலாதனம் அசையா சொத்தாக இருத்தல்
4. இலாப நட்டததில் ஊழியர்களை பங்குதாரர்களாக ஆக்குதல்
5. சகல பங்காளரும் சம அளவில் பங்கு பெறல்

**33.** ஹதிஸின் அடிப்படைகளை பற்றி ஆராயும் கலை
1. அஸ்மாஉர் ரிஜால்
2. இல்முல் ஜரஹ் வத்தஹ்தில்
3. உஸூலுல் ஹிதீஸ்
4. அல் மதன்
5. அழ் ழுப்த்

**34.** நேரடியான சட்ட ஆதாரங்கள் கிடைக்காத போது காழி சுய அனுமானத்தின் மூலம் வழங்கும் தீர்ப்பு
1. ஹுதூத்
2. கிஸாஸ்
3. தஃஸீர்
4. ஜினாயத்
5. கத்ல்

**35.** ஸக்காத் ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு கடமையாக்கப்பட்டுள்ளது

A. 01  2. 02  3. 03  4. 04  5. 05

safeer

**36.** இத்தா அனுஷ்டிக்கும் ஒரு பெண் செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட செயல்
1. விவாகம் செய்தல்
2. திருமணப் பேச்சு வார்த்தையில் ஈடுபடல்
3. அந்நிய ஆண்களுடன் உறவாடுதல்
4. நோயுற்றால் மருத்துவரை சந்தித்தல்
5. தன்னை அலங்கரித்து கொள்ளல்

**37.** இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்பே அறபு குடியேற்றங்கள் இலங்கையில் உருவாகியமைக்கு ஏதுவாய் அமைந்த காரணங்கள்

A. வஹப் அப்னு அபீ ஹப்ஸாவின் வருகை
B. இலங்கையில் வாசனை திரவியங்கள் தாராளமாக கிடைத்தன
C. பாதுகாப்பான துறைமுக வசதி
D. மன்னர்களின் வரவேற்பு
E. பனூ ஹாசிம்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டமை
F. ஆதம் (அலை) அவர்களின் கால் பதிந்த இடம் இலங்கையில் உண்டு என்ற நம்பிக்கை

1. CDEF 2. CDF 3. BCD 4 . BCE 5. BCAF

**38.**

| | X | Y |
|---|---|---|
| 1. | அஃலுர்ரஃயி | A. பாதினி |
| 2. | மதீனா வாசிகளது கூற்று | B. ஹனபி |
| 3. | அல்குர்ஆனின் மறைவான கருத்து | C.இமாம் மாலிக் |
| 4. | இமாம் பாவம் செய்யாதவர் | D.இஸ்னா அஷ்ஷரிஆ |
| 5. | அபூபக்கரும் தலைவருக்கு பொருத்தம் | E. ஸைதிகள் |

1. BCDEA 2. BCADE 3. BCAED 4. BCEDA 5. BECDA

**39.**

| | X | Y |
|---|---|---|
| 1. | பேணுதல் | A. இக்லாஸ் |
| 2. | இறையச்சம் | B. தவாழுஉ |
| 3. | இறைவனுக்காக செயற்படுதல் | C. மஹப்பத் |
| 4. | நேசம் | D. தக்வா |
| 5. | பணிவு | E. அல் வரஃ |

1. DCBEA 2. EDCBA 3. EDACB 4. EDBCA 5. EDCAB

**40.**

| | X | Y |
|---|---|---|
| 1. | விபச்சாரம் | A. கரம் துண்டிக்கப்படல் |
| 2. | கொலை | B. 40 கசையடி |
| 3. | திருட்டு | C. 80 கசையடி |
| 4. | அபாண்டம் சுமத்தல் | D. 100 கசையடி |
| 5. | மது அருந்துதல் | E. பழிக்குபழி |

1. ACBDE 2. CADEB 3. CBDEA 4. DABEC 5. DEACB

**41.**

| | X | Y |
|---|---|---|
| 1. | ஸுலதானுல் முபஸ்ஸிர் | A. ஷாஹ் வலியுல்லாஹ் |
| 2. | பீழாலி குர்ஆன் | B. ரஷீத் ரிழா |
| 3. | துப்ஸீருல் மனார் | C. ஸுலைமான் நத்வி |
| 4. | அரலுல் குர்ஆன் | D. இப்னு அப்பாஸ் ரழி |
| 5. | பைழுல் கபீர் | E. செய்யித் குதுாப் |

1. EDCBA 2. CBADE 3. DEBCA 4. DBEAC 5. BCADE

Safeer

**42.** ஹதீஸ் தொகுப்பாசிரியர்கள்
1. முஹத்திஸீன்கள்
2. முபஸ்ஸிரீன்கள்
3. புகஹாக்கள்
4. உலமாக்கள்
5. ஆலிம்கள்

**43.** இலங்கைக்கு இஸ்லாத்தின் தூதை கொண்டு வந்தவர்
1. இப்னு பதுூதா
2. இப்னு ஷஹ்ரையர்
3. வஹப் இப்னு ஹப்ஸா
4. காலித் பின் பகாயா
5. மாப்பிள்ளை ஆலிம்

**44.** ஹஜ்ஜில் இறுதியாக நிறைவேற்றப்படும் தவாப்
1. தவாபுல் அகீரா
2. தவாபுல் குதூம்
3. தவாபுல் இபாழா
4. தவாபுல் விதா
5. தவாபுல் அவ்வல்

- 45 தொடக்கம் 50 வரையிலான வினாக்களில் இரண்டு வகையான கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள சோடி கூற்றுக்களுக்கு (1) , (2) , (3) , (4) , (5) என்பவற்றில் மிக பொருத்தமானதை தெரிவு செய்து அதன் இலகக்த்தை பெயரிடுக.

| இலக்கம் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1 | சரியானது | சரியானது |
| 2 | பிழையானது | சரியானது |
| 3 | சரியானது | பிழையானது |
| 4 | பிழையானது | பிழையானது |
| 5 | சரியானது | முதலாவது கூற்றை மேலும் விளக்குகின்றது |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **45.** | ஷீஆக்களில் ஸெய்திகள் ஒப்பிட்ட ரீதியல் அஹ்லுஸ் ஸுன்னாவுக்கு நெருக்கமானவர்கள் | தகிய்யா என்பது ஷீஆக்களின் ஒரு நிலைப்பாடாகும் |
| **46.** | சீனாவுக்கான பயணத்தின் போது இலங்கை மன்னனை சந்தித்த நபித்தோழர் வஹப் இப்னு ஹப்ஸா ஆகும். | காலித் பின் பகாயாவின் அடக்கஸ்தலம் கண்டியில் உள்ளது. |
| **47.** | கதீஸ் குத்ஸியின் கருத்துக்கள் நபியவர்களால் குறிப்பிடப்பட்டவையாகும் | முதவாதிரான ஹதீஸ்கள் ஆகாத்தை விட தரம் கூடியவையாகும் |
| **48.** | உர்பை முற்றாக சட்ட மூலாதாரமாக கொள்ள முடியாது | ஹராத்திற்கு வழிவகுப்பவையும் ஹராமே |
| **49.** | பைத்துல் மால் நிறுவனத்தை தோற்றுவிக்க இப்றாஹிம் பின் அத்ஹம் ஆலோசனை வழங்கினார் | மவாலியாக்கள் ஜிஸ்யா வரிகள் இஸ்லாமிய அரசுக்கு செலுத்த வேண்டும் |
| **50.** | நுபுவத் 7-10 வரை ஷி:பு அபுதாலிபில் நபியவர்களும் பனூ ஹாஷிம்களும் தடுத்துவைக்கப்பட்டனர் | நபியவர்களது பிரச்சார முயற்சியை தடுத்து நிறுத்த குழரஷியர்கள் பல வழிமுறைகளை கையாண்டனர். ஷி:பு அபுதாலிப் நிகழ்வு அதில் கொடுமையானது. |

**அறிவுறுத்தல்கள்.**

- பகுதி I இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி II இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
- ஒவ்வொரு வினவுக்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்.

**அறிவுறுத்தல்கள் :**

பகுதி I இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி II இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக

பகுதி - I

**பகுதி I**

01. பின்வருவனவற்றை விளக்குக
    - i. இஜ்திஹாத் என்றால் என்ன? (2 புள்ளிகள்)
    - ii. இஜ்திஹாதின் வீழ்ச்சிக்கான காரணங்கள் 5 ஐ குறிப்பிட்டு ஒன்றை விளக்குக? (4 புள்ளிகள்)
    - iii. இஜ்மா **அல்லது** கியாஸ் என்பதை வரைவிலக்கணப்படுத்தி அது ஒரு சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரங்களையும் விளக்குக? (6 புள்ளிகள்)
    - iv. மகாஸிதுஷ் ஷரீஆவின் பரிமாணங்களை விளக்குக? (8 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றை விளக்குக
    1. ஆஜ்னபி – மஹ்ரமி என்பதை அடையாளப்படுத்துக (2 புள்ளிகள்)
    2. விவாகரத்து முறைகள் நான்கை குறிப்பிட்டு இரண்டை விளக்குக (4 புள்ளிகள்)
    3. இத்தாவின் நோக்கங்கள் மற்றும் வகைகளை விளக்குக (6 புள்ளிகள்)
    4. கணவன் மனைவி உரிமைகள் பற்றி விளக்குக (8 புள்ளிகள்)

03. பின்வருவனவற்றை விளக்குக
    1. மக்கி மதனி என்பதை அடையாளப்படுத்துக (2 புள்ளிகள்)
    2. நாசிக் மன்சூக் வகைகளை உதாரணங்களுடன் குறிப்பிடுக (4 புள்ளிகள்)
    3. அல்குர்ஆனின் அணுகுமுறைகளை விளக்குக (6 புள்ளிகள்)
    4. இ∴ஜாஸதுல் குர்ஆன் பற்றி விளக்குக (8 புள்ளிகள்)

**பகுதி ii**

04. பின்வருவனவற்றை விளக்குக
    - i. பிரபஞ்சம் / மனிதன் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை குறிப்பிட்டு விளக்குக (10 புள்ளிகள்)
    - ii. இபாதத் அஹ்லாக் என்பவற்றுக்கான தொடர்பினை அல்குர்ஆன் ஸுன்னா ஆதாரம் கொண்டு விளக்குக (10 புள்ளிகள்)

05. பின்வருவனவற்றை விளக்குக
    - i. இஸ்லாமிய சமூக அமைப்பினை பேணுவதில் பள்ளிவாசல்களின் பண்புகள் (10 புள்ளிகள்)
    - ii. ஜீவகாருண்யம் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை விளக்குக (10 புள்ளிகள்)

safeer

06. பின்வருவனவற்றை விளக்குக

i. வறுமை ஒழிப்புக்கு இஸ்லாம் முன்வைக்கும் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் (10 புள்ளிகள்)

ii. தடைசெய்யப்பட்ட பொருளாதார முறைமைகளை குறிப்பிட்டு அதனால் ஏற்படும் தாக்கங்களையும் விளக்குக. (10 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றை விளக்குக

1. ஷீயா இயக்கம் பற்றியும் அதன் கொள்கைகள் பற்றியும் விளக்குக (10 புள்ளிகள்)
2. இஸ்லாமிய அகீதாவில் முரண்பாடு தோன்றுவதற்கான காரணங்கள் பற்றி விளக்குக (10 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுக்கு சிறு குறிப்பு எழுதுக

1. இலங்கையில் முஸ்லிம்களின் பொருளியல் பங்களிப்பு (5 புள்ளிகள்)
2. மு.ஃ.தஸிலாக்கள் (5 புள்ளிகள்)
3. போலியான ஹதீஸ்கள் (5 புள்ளிகள்)
4. உழைப்பின் முக்கியத்துவம் (5 புள்ளிகள்)

மேலதிக தேடலுக்காக.........

தாபிஈன்கள் காலத்தில் சுன்னாவின் பாதுகாப்பு
அனுமதிக்கப்பட்ட பொருளாதார முறைகள்
குற்றங்களை கட்டுப்படுத்த இஸ்லாம் முன்வைக்கும் வழிகள்
இமாம் பஹாரி

Safeer
பயிற்சியும் முயற்சியும் வெற்றிக்கு வழி

# விடையமைப்பு

## பகுதி – I

**கேள்வி இல : 01**

1. **இஜ்திஹாத் என்றால் என்ன?**
    - ✓ "ஜஹ்த" (கஷ்டம்) / "ஜுஹ்த" (முயற்சி) என்ற வினை அடியிலிருந்து தோன்றியது
    - ✓ "அல்குர்ஆனோ, ஸுன்னாவோ நேரடியாகத் தீர்வு குறிப்பிடாத ஒரு பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஒரு சட்ட அறிஞன் மேற்கொள்ளும் அறிவியல் ரீதியான கடும் முயற்சியையே இஸ்லாமிய வழக்கில் இஜ்திஹாத்"
    - ✓ நபியவர்களின் காலத்தில் குர்ஆனும் சுன்னாஹ்வும் மூலாதாரமாக இருந்தது
    - ✓ நபியவர்களுக்குப் பின் குர்ஆனையும் சுன்னாஹ்வையும் ஆதாரமாகக் கொண்டு இஜ்திஹாத் கண்டார்கள்
    - ✓ இஸ்லாம் விரிவடைதலும் பல பிரச்சினைகள் தோன்றியமையும் அதற்கான தீர்வு குர்ஆன், சுன்னாவில் நேரடியாக கிடைக்காமையும்

2. **இஜ்திஹாதின் வீழ்ச்சிக்கான காரணங்கள் 5 ஐ குறிப்பிட்டு ஒன்றை விளக்குக?**
    - ✓ மத்ஹப் மீது கொண்ட அளவுகடந்த பற்று
    - ✓ மத்ஹபுடைய இமாம்கள் சமூகத்தில் அந்தஸ்து பெற்றிருந்தமையும் அவர்களைப் போன்ற இமாம்கள் உருவாக முடியாது என்ற எண்ணமும
    - ✓ முஜ்தஹித்கள் நீதிபதிப் பொறுப்புக்கு தெரிவு செய்யப்படாத போது முகல்லித்கள் தெரிவு செய்யப்பட்டமை
    - ✓ மத்ஹப் சிந்தனைகள் நூலுருப் பெற்று மக்கள் மயப்பட்டிருந்தமை
    - ✓ தகுதியற்றோர் இஜ்திஹாத் செய்வதற்கு துணிந்தமையால் ஏற்பட்ட பாதகமான விளைவுகள்

3. **இஜ்மா / கியாஸ் என்பதை வரைவிலக்கணப்படுத்தி அது ஒரு சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரங்களையும் விளக்குக?**

    - ✓ **அல்குர்ஆன் ஆதாரங்கள்**
      "மக்கள் மீது சாட்சி கூறுவோராகவும் நீதியை ஏற்படுத்துவோராகவும் அமையும் பொருட்டு உங்களை நாம் நடுநிலையான சமூகமாக அமைத்துள்ளோம்." (2:143)
    - ✓ **ஸுன்னாவின் ஆதாரங்கள்**
      "சத்தியத்தில் நிலைத்திருக்கக் கூடிய ஒரு கூட்டம் எனது சமூகத்தில் என்றென்றும் இருந்து வருவார்கள்." (அபூதாவூத்)
    - ✓ **ஸஹாபாக்கள் பின்பற்றியமை**
    - ✓ **பகுத்தறிவு ரீதியான ஆதாரம்**

**4. மகாஸிதுஷ் ஷரீஆவின் பரிமாணங்களை விளக்குக?**

**i. ழரூரிய்யாத் - அத்தியாவசிய நிலை (அத்தியவசிய தேவைகள்)**

- தீனை பாதுகாத்தல்.
- உயிரைப் பாதுகாத்தல்.
- புத்தியைப் பாதுகாத்தல்.
- பரம்பரயைப் பாதுகாத்தல்.
- மானத்தைப் பாதுகாத்தல்.
- செல்வத்தைப் பாதுகாத்தல்.

**ii. ஹாஜிய்யாத் - தேவை நிலை (சாதாரணத் தேவைகள்)**

……………………………………………………………………
……………………………………………………………………
……………………………………………………………………
……………………………………………………………………
……………………………………………………………………
……………………………………………………………………
……………………………………………………………………
……………………………………………………………………
……………………………………………………………………
……………………………………………………………………
……………………………………………………………………
……………………………………………………………………

**iii. தஹ்ஸீனிய்யா - ஆடம்பர நிலை (மேலதிக தேவைகள்)**

- உயர்ந்த ஒழுக்க விழுமியங்களுக்கும் சீரிய பண்பாடுகளுக்கும் இனங்க மனித வாழ்வு அமைவதற்குத் தேவையான நலன்களாகும
- ழரூரிய்யாத், ஹாஜிய்யாத் வகையான நலன்களை விடவும் தரத்தில் குறைந்தவை

……………………………………………………………………
……………………………………………………………………
……………………………………………………………………
……………………………………………………………………
……………………………………………………………………
……………………………………………………………………
……………………………………………………………………
……………………………………………………………………

Safeer

**கேள்வி இல : 02**

### 1. ஆஜ்னபி – மஹ்ரமி என்பதை அடையாளப்படுத்துக?

- ✓ மஹ்ரமி என்ற சொல் கண்ணியம் என்ற அர்த்தத்தில் பாவிக்கப்படுகின்றது
- ✓ குடும்ப உறவின் காரணத்தால் அல்லது வேறு ஏதேனும் ஒரு காரணத்தால் ஒரு பெண்ணுக்கு நிரந்தரமாகவே திருமணம் முடிக்க தடைசெய்யப்பட்ட ஆணைக் குறிப்பதற்கும் இதன் மறுபக்கமாக ஒரு ஆணுக்கு நிரந்தரமாகவே திருமணம் முடிக்க தடை செய்யப்பட்ட பெண்ணைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றது
- ✓ அஜ்னபி என்ற சொல்லுக்கு ''அந்நியர்'', ''புதியவர்'' , ''உறவினர் அல்லாதவர்'' போன்ற கருத்துக்கள் உண்டு
- ✓ பெண்ணுக்கு திருமணம் முடிக்க ஆகுமாக்கப்பட்ட பெண்ணையும் ஆணுக்கு திருமணம் முடிக்க ஆகுமாக்கப்பட்ட பெண்ணையும் குறிக்கின்றது

### 2. விவாகரத்து முறைகள் நான்கை குறிப்பிட்டு இரண்டை விளக்குக?

**i. தலாக்** **ii.குல்உ** **iii.பஸ்கு** **iv.லிஆன்**
**v.ளிஹார்** **vi.ஈலாஉ**

**தலாக்**

- ✓ மணமுறிவு, சுதந்திரமடைதல் எனும் மொழிக் கருத்துக்களைக் கொண்டது
- ✓ திருமண பந்தத்தில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கு ஆண்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள அனுமதியாகும்
  ''ஹலாலானவற்றுள் இறைவனுக்கு மிகவும் வெறுப்பானது விவகாரத்து பெறுவதாகும்.'' (ஹதீஸ்)
- ✓ தலாக்கிக்கு முன் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள அல்குர்ஆன் வழிகாட்டுகின்றது
  ''பெண்களை அனுபவிப்பதில் ஆசை கொண்டு அதிகமாக தலாக் சொல்பவனை அல்லாஹ் சபிக்கிறான்.''
- ✓ விவகாரத்துக்கான காரணங்கள்
  - கணவன் குடும்பச் செலவுகளை பொறுப்பெடுக்காமை.
  - பிழையான நடத்தைகள்.
  - கருத்தொற்றுமையின்மை.
  - பாலியல் பலயீனங்கள்.

- ✓ **தலாக் முறைகள்**

**முறையான தலாக். (தலாக் ஸுன்னி)**

- பெண் சுத்தமாக (துஹ்ர்) இருக்கும் காலத்தில் தலாக் சொல்லல
- பெண் சுத்தமாக இருக்கும் காலத்தில் உடலுறவு கொள்ளாத நிலையில் தலாக் சொல்லல
- மூன்று தலாக்குகளையும் தனித்தனியாக சுத்தமான காலங்களில் சொல்லல

**முறையற்ற தலாக். (தலாக் பிதஈ)**

- மாதவிடாய் காலப்பகுதியில் விவாகரத்துக் கூறல
- பெண் சுத்தமாக இருக்கும் காலத்தில் உடலுறவு கொண்ட நிலையில் தலாக் கூறல
- ஒரே தடவையில் மூன்று தலாக்கையும் கூறல்

- ✓ **தலாக் வகைகள்**
  - **i.** ரஜஈ (மீளத்தக்கது)
  - **ii.** பாஇன் (மீள முடியாதது)
    - I. பாஇன் ஸுக்ரா (சிறிய பிரிவினை)
    - II. பாஇன் குப்ரா (பெரிய பிரிவினை)

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………

**குல்உ**

- "குல்உ" என்ற அறபுப் பதம் களைதல் அல்லது நீக்குதல் எனும் கருத்தினைத் தருகின்றது.
- "ஒரு பெண் தன் கணவனுடன் இணைந்து வாழ முடியாத நிலையேற்பட்டு அவன் மீது வெறுப்புக் கொண்டு விவாக பந்தத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்காக ஒரு தொகைப் பணத்தை அல்லது பொருளைக் கொடுத்துவிட்டு விவாகவிடுதலை பெறுவதைக் குறிக்கின்றது."
- ……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

3. **இத்தாவின் நோக்கங்கள் மற்றும் வகைகளை விளக்குக?**

**நோக்கங்கள்.**

- ✓ இத்தா பற்றிய அறிமுகம்
- ✓ இத்தா இறைவனால் விதியாக்கப்பட்ட ஒரு இபாதத்.
  - குறித்த பெண் கருவுற்றுள்ளாளா என்பதை அறிதல்.
  - துக்கம் அனுஷ்டிப்பதற்குரிய கால எல்லையை வரையறுத்தல்.
  - ஒரு குழந்தையின் பல்துறைசார்ந்த உரிமைகளைப் பேணுதல்.
  - தலாக் ரஜஈ ஆயின் மீண்டும் இணைந்து வாழ்வதற்கான சந்தர்ப்பம் வழங்குதல்.
  - பல்வேறு சமூகவியல் சார்ந்த நலன்கள் உள்ளன.

**வகைகள்**

- கணவன் மரணித்த பெண்களது இத்தா

  ……………………………………………………………………………………

  ……………………………………………………………………………………

- தலாக் கூறப்பட்ட பெண்களது இத்தா

  ……………………………………………………………………………………

  ……………………………………………………………………………………

- கர்ப்பிணிப் பெண்களுக்குரிய இத்தா

  ……………………………………………………………………………………

  ……………………………………………………………………………………

4. **கணவன் மனைவி உரிமைகள் பற்றி விளக்குக?**

✓ **கணவனது உரிமைகள்**

✓ **மனைவியின் உரிமைகள்.**

- தனது உடற் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளல்.
- சகல செலவினங்களையும் பெற்றுக் கொள்ளல்.
- அன்பு, கருணை பெறல்.
- தனக்குரிய பாதுகாப்பைப் பெறல்.
- மன நிறைவோடு வாழுதல்.
- உறவுகளோடு சேர்ந்து உறவு பேணுதல்.
- சமயக் கடமைகளை நிறைவேற்றல்.
- கணவனது சொத்தில் வாரிசுரிமை பெறுதல்.

**கேள்வி இல : 03**

01. **1. மக்கி மதனி என்பதை அடையாளப்படுத்துக**

✓ ஹிஜ்ரத்துக்கு முன்னர் அருளப்பட்டவற்றை மக்கி எனவும் பின்னர் அருளப்பட்டவை மதனீ எனவும் சிலர் வகைப்படுத்துவர்

✓ சிலர் மக்காவிலும் அதனைச் சூழ அமைந்த அறபா, ஹுதைபியா, மினா ஆகிய பிரதேசங்களில் அருளப்பட்டவை ஹிஜ்ரத்துக்குப் பின் அருளப்பட்டவையாயினும் சரி அவை மக்கி என்றும் வகைப்படுத்துவர

Safeer

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

2. **நாசிக் மன்சூக் வகைகளை ஆதாரங்களுடன் குறிப்பிடுக**

- ✓ **அல்குர்ஆன் வசனம் ஒன்று இன்னொரு அல்குர்ஆன் வசனத்தால் மாற்றப்படுதல**
  ஒரு பெண்ணின் கணவன் இறந்துவிட்டால் அவளது இத்தாக்காலம் ஒரு வருடம் (2:240) என்றும் பின்னர் அச்சட்டம் 4 மாதங்களும் 10 நாட்களும் என்று (2:234) இவ் வசனத்தால் மாற்றப்பட்டது
- ✓ **அல்குர்ஆனின் சட்டம் ஒன்று அஸ்ஸுன்னாவினால் மாற்றப்படுதல்**
  இது குறித்து இமாம்களிடையே அபிப்பிராய பேதங்கள் காணப்படுகின்றன
- ✓ **ஸுன்னாவின் சட்டம் ஒன்றை அல்குர்ஆன் மாற்றுதல**
  இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களில் கிப்லாவாக மஸ்ஜிதுல் அக்ஸாவை நோக்கியே முஸ்லிம்கள் தொழுதனர். பின்னர் (2:144) வசனத்தின் மூலம் அது மஸ்ஜிதுல் ஹராமின் திசையில் மாற்றப்பட்டது
- ✓ **ஸுன்னாவின் சட்டம் ஒன்று ஸுன்னாவினால் மாற்றப்படுதல**
  "நான் ஆரம்பத்தில் புதைகுழிகளைத் தரிசிப்பதை உங்களுக்குத் தடை செய்திருந்தேன். இப்போது நீங்கள் அதனைத் தரிசிக்கலாம்."

3. **அல்குர்ஆனின் அணுகுமுறைகளை விளக்குக?**

- ✓ இரு வகையானது
  - **உளரீதியான அணுகுமுறை.**
    - ஈமான் (நம்பிக்கை கொள்ளல்)
    - அத்தக்வா (பயபக்தி)
    - பணிவு
    - சிந்தனை (ததப்புர்)
  - **செயற்பாடு ரீதியானவை**
    - ஓதுதல், செவிமடுத்தல
    - அல்குர்ஆனை மனனமிடுதல
    - விளங்குதல
    - செயற்படுத்தல
    - அல்குர்ஆனின் தூதை எத்திவைத்தல்

4. **இ.்.ஜாஸதுல் குர்ஆன் பற்றி விளக்குக?**

- ✓ மொழி ரீதியான அற்புதம
- ✓ அற்புதத் தன்மைமிகு எதிர்வு கூறல்கள
- ✓ அற்புதத் தன்மைமிகு விஞ்ஞான உண்மைகள
- ✓ சட்டவியல் ரீதியான அற்புதம
- ✓ நிலைத்திருக்கும் அற்புதம
- ✓ வரலாற்று ரீதியான அற்புதம
- ✓ மனதை மாற்றும் அற்புதம்
- ✓ மனனமிடுவது இலகுவான அற்புதம்

Safeer

**கேள்வி இல : 04**

1. **பிரபஞ்சம்/ மனிதன் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை குறிப்பிட்டு விளக்குக?**

- ✓ "அல்லாஹ் தவிர்ந்த அனைத்தும் படைப்பினங்களும் பிரபஞ்சமாகும் "
- ✓ உலக வாழ்வையும் அதன் இலக்கையும், புரிந்து கொள்வதற்கு பிரபஞ்சம் பற்றிய அறிவு அவசியமானதாகும்
- ✓ பிரபஞ்சத்தின் படைப்பாளன் அல்லாஹ்
- ✓ பிரபஞ்சம் ஓரு சத்தியத்தின் அடிப்படையில் படைக்கப்பட்டுள்ளது
- ✓ பிரபஞ்சம் அல்லாஹ்வின் சட்டத்தின் கீழ் இயங்குகின்றது

**2. இபாதத் அஹ்லாக் என்பவற்றுக்கான தொடர்பினை அல்குர்ஆன் ஸுன்னா ஆதாரம் கொண்டு விளக்குக?**

- ✓ வாழ்வில் ஒழுக்கத்தின் முக்கித்துவம
  - நபிமார்களின் , நல்லடியார்களின் பண்பாகும்
  - அடிப்படையான வணக்க வழிபாடுகளின் நோக்கம்
  - ஒழுக்கப் பண்புகள் ஈமானோடு இணைந்த அம்சமாகும்
  - நல்லொழுக்கங்களின் அதிகரிப்பு ஈமானை அதிரிக்கச் செய்யும்
  - தீய பண்புகள் ஈமானைப் பாதிக்கும்

Safeer
பயிற்சியும் முயற்சியும் வெற்றிக்கு வழி

**கேள்வி இல : 05**

1. **இஸ்லாமிய சமூக அமைப்பினை பேணுவதில் பள்ளிவாசல்களின் பண்புகள்**
   - ✓ சமூகத்திற்கான தலைமைத்துவப் பொறுப்பை மஸ்ஜித்கள் ஏற்று வழிநடாத்த வேண்டும
   - ✓ கல்வி வட்டங்களை ஏற்பாடு செய்து கற்றல் , கற்பித்தல் சூழ்நிலையை உருவாக்குதல்.
   - ✓ பொருத்தமான நிர்வாகமும் தலைமையுள்ள இமாம்களும் நியமிக்கப்படல்.
   - ✓ நூலகங்களை மஸ்ஜித்களுக்கு அண்மையில் அமைத்தல்.
   - ✓ பொருளாதாரப் பிரச்சினைகளை தீர்க்க மஸ்ஜித்களில் ''பைதுல் மால்'' ஏற்படுத்தல்.
   - ✓ பொதுப் பிரச்சினைகளை தீர்க்க இணக்க சபைகளை உருவாக்குதல்.
   - ✓ ……………………………………………………………………………………

2. **ஜீவகாருன்யம் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை விளக்குக?**
   - ✓ உயிரினங்கள் அனைத்தும் இறைவனின் குடும்பம்.
   - ✓ இறைவனின் படைப்பாகிய ஏனைய ஜீவராசிகள் மீதும் அன்புடனும் கருணையுடனும் நடக்கப் பணிக்கின்றது.
   - ✓ இஸ்லாத்தின் வருக்கைக்கு முன் அரேபியர்கள் மத்தியில் மிருகவதை மலிந்து காணப்பட்டது
   - ✓ ஜீவகாருண்யம் ஈமான் சார் அம்சம் ஆகையால் மீறுவது தண்டனைக்குரியது.
   - ✓ இஸ்லாத்தின் வருகைக்குப் பின் மிருகங்களுக்குரிய உரிமைகள், சிறப்புக்கள் வழங்கப்பட்டன.
   - ✓ போர்க்களங்களில் மிருகங்களை அனாவசியமாக கொல்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

- ✓ இஸ்லாம் கூறும் உயிரினங்களுடன் நடக்க வேண்டிய முறை
    - ○ இரக்கம் காட்டுதல்.
    - ○ தீங்கிழைக்காதிருத்தல் .
    - ○ குறித்த உயிரினம் எதற்காகப் படைக்கப்பட்டுள்ளதோ அவ்வேலையை மட்டும் அதனிடம் இருந்து பெறல்.
    - ○ ஓய்வளித்தல்.

- ✓ **(16 :5 – 8) வசனம்**

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

**கேள்வி இல : 06**

1. **வறுமை ஒழிப்புக்கு இஸ்லாம் முன்வைக்கும் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும்**
    - ✓ ஸகாத்
    - ✓ உழைப்பை வழியுறுத்தியுள்ளமையும் அதன் பால் தூண்டியுள்ளமையும
    - ✓ வட்டியில்லாக் கடன் வழங்க ஊக்குவித்துள்ளமை
    - ✓ ‘‘ஸதகா’’ , ‘‘ஹிபத்’’ , ‘‘ஹதிய்யா’’ , ‘‘வஸிய்யத்’’ , ‘‘வக்ப்’’ , வாரிசுச் சொத்துக்கள், பொதுச் சொத்துக்கள் , திறைசேரி (பைத்துல்மால்) வரிக்கொள்கை
    - ✓ சொத்துப் பங்கீடு விதியாக்கியுள்ளமை
    - ✓ வீண் விரயம் தடுக்கப்பட்டுள்ளமை
    - ✓ கப்பாரா, பித்யா போன்றன விதியாக்கப்பட்டுள்ளமை
    - ✓ ஸகாதுல் பித்ர், உழ்ஹிய்யா, அகிகா, நத்ர் போன்ற கிரியைகள

2. **தடைசெய்யப்பட்ட பொருளாதார முறைகளை குறிப்பிட்டு அதனால் ஏற்படும் தாக்கங்களையும் விளக்குக**
    - ✓ தடுக்கப்பட்ட பொருளாதார முறைகள்
        - ○ பொய்ச் சத்தியம் செய்தல
        - ○ அளவை நிறுவையில் மோசடி செய்தல
        - ○ பதுக்கல
        - ○ கலப்படம் மற்றும் ஏமாற்றம
        - ○ திருடப்பட்ட அல்லது கொள்ளையிடப்பட்ட பொருட்களை விலை கொடுத்து வாங்குதல
    - ✓ விளைவுகள
        - ○ மறுமையில் நரகம் கிடைக்கும்.
        - ○ அநீதியிழைக்கப்படுதல்.
        - ○ உரிமை மீறப்படல்.
        - ○ சுயநலத்தன்மை அதிகரித்தல்.
        - ○ இறை சாபத்திற்குள்ளாகுதல்.
        - ○ இறையருள் நீங்குதல்.

    - ✓ **தவிர்ப்பதன் நன்மைகள்**

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

**கேள்வி இல : 07**

1. **ஷீயா இயக்கம் பற்றியும் அதன் கொள்கைகள் பற்றியும் விளக்குக**

- ✓ மொழிக்கருத்து
- ✓ பதவிளக்கம்
- ✓ தோற்றம்
- ✓ கொள்கைகள்
  - இமாமத் (தலைமைத்துவம்)
  - குபா
  - ரஜ்ஆ
  - இஸ்மத்
  - தகிய்யா
  - தீனா
  - முத்ஆ
- ✓ ஷீயாக்களின் உட்பிரிவுகள
  - இஸ்னாஅஸரிய்யா
  - இஸ்மாஈலிய்யா
  - பாத்தினிகள
  - ஸைதிக்கள
  - நுஸைரிகள

2. **இஸ்லாமிய அகீதாவில் முரண்பாடு தோன்றுவதற்கான காரணங்கள்**

- ✓ இஸ்லாத்திற்கு எதிரான சதிகள
- ✓ அரசியல் ரீதியான சர்ச்சைகள
- ✓ அந்நியக் கலாச்சாரத்தின் தாக்கங்கள
- ✓ பகுத்தறிவுக்கு முக்கியத்துவம் வழங்கியமை
- ✓ ஆராய தடை செய்யப்பட்ட விடயங்களை எல்லை மீறி ஆராய்ந்தமை
- ✓ அல்குர்ஆன், சுன்னாஹ் பற்றிய போதிய அறிவின்மை
- ✓ சுயநலமும் மனோ இச்சையும

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

Safeer
பயிற்சியும் முயற்சியும் வெற்றிக்கு வழி

**கேள்வி இல : 08**

1. **இலங்கையில் முஸ்லிம்களின் பொருளியல் பங்களிப்பு**
   - ✓ அநுராதபுர ஆட்சிக்காலம் முதல் இலங்கையின் சர்வதேச வணிகத்தை இலங்கை முஸ்லிம்களே பிரதிநிதித்துவப்படுத்தினர
   - ✓ படையெடுப்புக்களின் போது பாதிக்கப்பட்டவைகள் புனர் நிர்மாணம் செய்யப்பட்டமை, நீர்ப்பாசன நாகரீகம
   - ✓ பொலனறுவைக் காலப்பிரிவில் கொழும்பு வளர்ச்சியடைந்த ஒரு துறைமுக நகரமாகத் திகழ்ந்தது
   - ✓ மகா பராக்கிரமபாகு (கி.பி.1156 - 1186) வின் காலப்பிரிவில் முஸ்லிம்கள் வணிகத் துறையின் அபிவிருத்திக்காக உருவாகியிருந்த **'அந்தரங்கதுர'** என்ற மேல்சபையில் அங்கம் வகித்தமை

2. **மு.ُ.தஸிலாக்கள்**
   - ✓ மொழிக்கருத்து "பிரிந்து சென்றவர்கள்" என்பதாகும்
   - ✓ "அகீதா சார்ந்த விடயங்களை பகுத்தறிவு ரீதியாக சிந்தித்ததனால் எழுந்த கருத்து வேறுபாடு காரணமாக பெரும்பான்மை முஸ்லிம் சமூகத்தை விட்டும் பிரிந்து சென்ற ஒரு தத்துவ இயக்கம்."
   - ✓ தோற்றம்
   - ✓ மு.ُ.தஸிலாக்களின் அகீதா
     - தவ்ஹீத
     - நீதி
     - இரு நிலைகளுக்கு இடைப்பட்ட நிலை
     - வாக்குறுதியும் தண்டனையும்
     - நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல் கடமையாகும
     - மறுமையில் எவரும் அல்லாஹ்வைக் காண முடியாது
     - அல்குர்ஆன் படைக்கப்பட்டது
   - ✓ மு.ُ.தஸிலாக்களின் உட்பிரிவுகள்
     - வாஸிலிய்யா
     - ஹுதைலிய்யா
     - நிலாமிய்யா
     - ஹாதிபிய்யா
     - பஷரிய்யா

Safeer

3. **போலியான ஹதீஸ்கள்**

- ✓ நபி (ஸல்) அவர்கள் சொல்லாத, செய்யாத, அங்கீகரிக்காதவற்றை அவர்களது பண்புகளில், வர்ணனைகளில் அடங்காதவற்றை சொன்னதாகவும் செய்ததாகவும் அங்கிகரித்ததாகவும் பண்புகள், வர்ணனைகளில் அடங்குவதாகப் பொய்யாக குறித்து காட்டுவது
  ''யார் ஒருவர் நான் சொல்லாத ஒரு செய்தியை சொன்னதாக வேண்டுமென்று இட்டுக் கட்டுகின்றாரோ அவர் தங்குமிடம் நரகம் தான்''
- ✓ தோற்றம்
- ✓ போலி ஹதீஸ்கள் தோன்றியதற்கான காரணங்கள
  - o அரசியல் ரீதியான காரணங்கள
  - o ஸின்தீக்குகள் அல்லது இஸ்லாத்தின் எதிரிகளின் நடவடிக்கைகள
  - o மொழி, இனம், பிரதேசம், மத்ஹப், இமாம் எனும் விடயங்களில் வெறிகொண்டவர்கள் இட்டுக்கட்டியவை
  - o உபதேசிகளும் கதை கூறுபவர்களும் இட்டுக்கட்டியவை

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

4. **உழைப்பின் முக்கியத்துவம்**

- ✓ அல்குர்ஆன், ஹதிஸின் மூலம் உழைப்பு வலியுறுத்தப்பட்டுள்ளமை
  ''ஒருவன் சுயதொழில் மூலம் பெற்ற வருமானத்தைக் கொண்டு உட்கொள்ளும் உணவை விட வேறு சிறந்த உணவை உட்கொள்வதற்கில்லை.''
- ✓ நேர்மையான உழைப்புக்குரிய எல்லா வாயில்களையும் இஸ்லாம் திறந்து வைத்துள்ளது
- ✓ உழைக்காமல் இருப்பதை இஸ்லாம் தடுத்துள்ளது, ஹராமாக்கியுள்ளது
  ''(ஜும்ஆ)தொழுகை முடிந்து விட்டால் பூமியில் பரந்து சென்று அல்லாஹ்வின் அருளைத் தேடுங்கள்.''

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

Safeer
பயிற்சியும் முயற்சியும் வெற்றிக்கு வழி

**Knowledge is wealth**